சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 06.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 11/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | சரண்யா |
| தந்தை பெயர் | : | சிவசக்தி |
| கிராமம் | : | கள்ளக்குறிச்சி |
| தாலுக்கா | : | கள்ளக்குறிச்சி |
| தொழில் | : | காவல் உதவி ஆணையர் |
| வயது | : | 33 |

(இந்த சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டுமென அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டு அதன் படி 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 நாளாகிய இன்று சாட்சியானவர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள காணொளி அறையில் முன்னிலையாகியுள்ளார். இதன் பொருட்டு சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் அசிஸ்டன் ப்ரோகிராமராக பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான S.விசாலாட்சி அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சாட்சியின் பெயர், முகவரி மற்றும் அடையாளம் ஆகியவை

சாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ள சாட்சிய அழைப்பாணையுடன் ஒப்பிட்டு இன்னார் என அடையாளம் காட்டினார்.

இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.)

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது சென்னை மத்திய குற்றப்பிரிவில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.06.2023 ம் தேதியன்று நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது, அ.சா.ஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கை பேரிலான வழக்கை திருவாரூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் செயல்முறை ஆணை C.No. 60/SJ & HR/TVR/2023 dated 08.06.2023 ன் கீழான ஆணையின் படி நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. கடந்த 08.06.2023 ம் தேதியன்று சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட சாட்சிகளான அ.சா.1 தியாகராஜன், அ.சா.2 திருமாறன், அ.சா.3 சுஜைகாந்த், அ.சா 4 பிரவீன் குமார், அ.சா 5 மூவேந்தன், அ.சா 6 இளங்கோவன் ஆகியோர்களை விசாரணை செய்ததில், எனக்கு முன்னர் புலன் விசாரணை செய்த அதிகாரியிடம் கூறிய வாக்குமூலத்தையே என்னிடமும் கூறியதால் தனியாக நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

3. மேலும் இவ்வழக்கின் எதிரி செந்தில்குமார் என்பவர் தலைமறைவாக இருந்ததால், தக்க புலன் வைத்து கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டேன். மேலும் 15.06.2023 ம் தேதியன்று இவ்வழக்கின் எதிரி, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன் பிணை உத்தரவின்பேரில், தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் சரண் அடைந்து, பின்னர் பிணை மனு தாக்கல் செய்து, பிணை ஆணை பெற்று குடவாசல் காவல் நிலையத்தில் கையெழுத்திட உத்தரவிட்டார்கள் அந்த விபரம் எனக்கு தெரிய வந்தது.

4. மேலும், இதற்கு முன்னர் இருந்த புலன் விசாரணை அதிகாரியான இலக்கியா என்பவர் 06.06.2023 ம் தேதியன்று குடவாசல், காவல் ஆய்வாளர் மூலம் குடவாசல், வட்டாட்சியர் அவர்களுக்கு வாதி மற்றும் எதிரியின் சாதி சான்றிதழ்கள் கோரி விண்ணப்பத்திருந்தார். கடந்த 18.06.2023 ம் தேதியன்று வாதி மற்றும் எதிரியின் சாதி சான்றிதழ்களை பெற்றேன். மேற்படி சாதி சான்றிதழ்கள் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. குடவாசல் வட்டாட்சியர் அவர்களுக்கு 11.07.2023 ம் தேதியன்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே அ.சா.அ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.8 அமல்தாஸ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. மேற்கண்ட எனது விசாரணையில், சம்பவம் நடந்தது உண்மை என அறிந்து, கடந்த 11.07.2023 ம் தேதியன்று குற்ற எண் 282/2023 ச/பி. 294 (b), 506 (2) of IPC r/w 3 (1)(r), 3(1)(s) and 3(2)(va) of SC / ST (PoA) Act. ன்கீழ் எதிரயின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

7. எனது விசாரணையில் சம்பவம் உண்மை என அ.சா.3 சுஜைத்காந்த், கூறினார். எனது விசாரணையில் கூறியதைதான் நான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இவ்வழக்கில் நான் சாட்சிகளை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் தவறு, நான் சாட்சிகளை விசாரித்தேன் ஆனால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், சம்பவ இடத்திற்கு செல்லாமல், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு முன்னர் இருந்த புலன் விசாரணை அதிகாரியானவர் தயார் செய்த வழக்காவணங்கள் மற்றும் குடவாசல் வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய, வாதி மற்றும் எதிரியின் சாதி சான்றிதழ்களை மட்டும் தான் நான் தாக்கல் செய்தேன்.

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் 11.07.2023 என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவ இடம் என்று தனியார் இடம் என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக தெரு என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமாக சொல்லப்படும் இடமான வயலின் உரிமையாளர் எவரையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். அவர்கள் யாரும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்பதால், இவ்வழக்கில் அவர்களை விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறான முறையில் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(சாட்சியம் முடிந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் மற்றும் குறுக்கு விசாரணை வாக்குமூலம் அச்சு நகல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மறுமுனையில் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றதில் அசிஸ்டன் ப்ரோகிராமராக பணிபுரியும் தகுதி வாய்ந்த

ஒருங்கிணைப்பாளரான S.விசாலாட்சி அவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட அவுட் எடுக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு பின்னர் தபாலில் அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. இவற்றிற்கு ஆதரவாக, ஒருங்ணைப்பாளரும் கையொப்பம் செய்து அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.)

இன்று 06.03.2026 மறுமுனையில் அங்கீகரிக்கதக்க ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் என் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் சாட்சி ஆஜராகி, சாட்சியம் சொல்ல சொல்ல கணினி தட்டச்சு மூலம் பதிவு செய்யப்பட்டு, முழு சாட்சியம் அடங்கிய PDF File சாட்சிக்கு அவர் ஆஜராகியுள்ள மறுமுனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, மறுமுனையில் அதை ஒருங்கிணைப்பாளர் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து, அதனை சாட்சி படித்துப்பார்த்து, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, மறுமுனை ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் கையொப்பம் செய்தும், பின்னர் இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலமாக அவற்றை அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அவ்வாறே அசல் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு என்னால், கையொப்பம் செய்யப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.06 16:02:39 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் வகுப்பினர் மற்றும்
பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம்,
திருவாரூர்.